இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 08.05.2026

# இது சரிவு அல்ல...

'திராவிடக் கட்சிகளின் ஆட்சி முடிவுக்கு வந்து விட்டது' என்ற பொருளில் சில நாளிதழ்கள் செய்திகள் வெளியிடுவதைப் பார்க்கும் போது, அவர்களது ஆயிரங்காலத்து வன்மம் வெளிப்படுவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பேரவைத் தலைவராகவும், அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்த மரியாதைக்குரிய சி.பா.ஆதித்தனாரின் 'தினத்தந்தி'யுமா இப்படி எழுதி பெருமைப்பட வேண்டும்?

அனைத்து வகையிலான ஆதிக்கத்துக்கும் எதிரான இயக்கம், திராவிட இயக்கம். ஆதிக்கச் சக்திகளும், அத்தகைய எண்ணங்களும் கொண்டவர்கள் கோலோச்சும் காலம் வரையில் திராவிட இயக்கம் இம்மண்ணில் இருக்கும். யாருக்கும் சந்தேகம் வேண்டாம்! அற்பத்தனமான மகிழ்ச்சிகளும் வேண்டாம்!

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு தேர்தல் வெற்றியால் வளர்ந்த கட்சியும் அல்ல. ஒரு தேர்தல் தோல்வியால் முடிந்து போகப் போகும் கட்சியும் அல்ல.

1957 ஆம் ஆண்டு முதல் முறை போட்டியிட்ட தேர்தலில் 15 இடங்களைக் கைப்பற்றியது கழகம். அடுத்து 1962 தேர்தலில் 50 இடங்களைக் கைப்பற்றி சட்டமன்ற எதிர்க்கட்சியாக உயர்ந்தது. 1967 தேர்தலில் 137 இடங்களைக் கைப்பற்றி முதல்முறை ஆட்சியைக் கைப்பற்றியது கழகம்.

1967, 1971, 1989, 1996, 2006, 2021 என ஆறு முறை ஆட்சி அமைத்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

1977, 1980, 1984, 1991, 2001, 2011, 2016 என ஏழு முறை எதிர்க்கட்சி வரிசையில் செயல்பட்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

இவைதான் அரை நூற்றாண்டு தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு ஆகும். வெற்றி, தோல்விகளால் அளவிடப்பட்டது அல்லது கழகம்.

தி.மு.க. என்பது எப்போதும் காவல் அரண். காவலுக்கு நிற்பவன், தமிழ்நாடு என்ற கோட்டையையும் காப்பான். கோட்டையை அழிக்கத் துடிக்கும் சக்திகளையும் வீழ்த்துவான். இந்த இரண்டு செயல்களையும் காவல் அரணாம் கழகம் செய்யும். இதைத்தான் காலம் காலமாக கழகம் செய்து வருகிறது.

**திரைக்கவர்ச்சியை உண்மையென நம்பி, 'தாங்கள் என்ன செய்கிறோம்' என்பதே தெரியாமல் விஜய் கட்சிக்கு வாக்குகள் அதிகம் ஆகி இருக்கிறது. அவரது அரசியலுக்காக அல்ல. அவரது கொள்கைக்காக அல்ல. தி.மு.க.வுக்கு எதிராக அல்ல. கழக ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பு அலை என்பது இல்லை. நமது வேட்பாளர்கள், பரப்புரை போன இடத்தில் எங்கும் தடுக்கப்படவில்லை. எதிர்ப்புகள் இல்லை. இருப்பினும் விஜய் கட்சி அதிக வாக்குகளை வாங்கியது என்றால், அதற்கு அவரது சினிமா புகழ் மட்டுமே காரணம் ஆகும். கட்சி ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளே ஆகி இருக்கலாம். ஆனால் அவர் சினிமாவில் 25 ஆண்டுகளாக இருப்பவர். அந்த பிம்பம் ஒன்றே அவருக்கு விழுந்த வாக்குகள் ஆகும்.**

விழுப்புரம், அரியலூர், திருவாரூர், தென்காசி, நீலகிரி, நாகை, மயிலாடுதுறை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் விஜய் கட்சி வெற்றி பெற முடியவில்லை. எங்கே போனது அவரது செல்வாக்கு?

புள்ளி விபரங்களின்படி தி.மு.க. கூட்டணிக்கு 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகள் கிடைத்துள்ளன. விஜய் கட்சியானது தி.மு.க. கூட்டணியை விட 17.43 லட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. தி.மு.க. கூட்டணிக்கும் விஜய் கட்சிக்குமான வாக்கு விழுக்காடு வேறுபாடு என்பது 3.52 விழுக்காடு மட்டுமே!

27 தொகுதிகளில் மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் தான் தி.மு.க. கூட்டணி வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது.

* **திருப்பத்தூர் -1**
* **கன்னியாகுமரி -214**
* **போளூர் - 227**
* **பரமத்தி வேலூர் - 308**
* **கும்பகோணம் - 679**
* **கம்பம் - 751**
* **கள்ளக்குறிச்சி - 798**
* **உதகை - 976**
* **ஸ்ரீவைகுண்டம் - 1188**
* **அந்தியூர் - 1260**
* **மணப்பாறை - 1426**
* **பழனி - 1452**
* **மானாமதுரை - 1354**
* **கரூர் -1554**
* **மன்னார்குடி -1566**
* **உசிலம்பட்டி - 1805**
* **ஏற்காடு - 2189**
* **மொடக்குறிச்சி - 2430**
* **புவனகிரி - 2487**
* **திருவாடானை - 2513**
* **சேந்தமங்கலம் - 2655**
* **சோழவந்தான் - 2678**
* **லால்குடி - 2739**
* **நிலக்கோட்டை - 2925**
* **பெண்ணாகரம் - 3165**
* **கிருஷ்ணராயபுரம் - 3617**
* **அரூர் - 3329**

**- இப்படி மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது தி.மு.க. கூட்டணி.**

**'திராவிடக் கட்சி ஆட்சி முடிந்துவிட்டது' என்று எழுதும் நாளிதழ்கள், பிரதமர் மோடியின் பா.ஜ.க. எத்தனை இடங்களில் வென்றுள்ளது என்பதைப் பட்டியல் போட்டு, 'பா.ஜ.க. முழுமையாகப் புதைக்கப்பட்டு விட்டது' என்று எழுதினார்களா என்றால் இல்லை.**

27 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க., உதகமண்டலம் தொகுதியில் மட்டும் வென்றுள்ளது. அதுவும் 976 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வென்றுள்ளது. மற்ற பா.ஜ.க. தலைகள் அனைத்தும் வீழ்த்தப்பட்டுள்ளது. முந்தைய தேர்தலில் 4 இடங்களில் வென்ற பா.ஜ.க., இப்போது அதில் மூன்று இடங்களை இழந்துள்ளது. இதற்குப் பொறுப்பேற்க வேண்டியது பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அல்லவா?

## ரோடு ஷோ - பல்வேறு வித்தைகள் - வியூகங்களைச் செய்தும்

# தேர்தல் முடிவுகள் பா.ஜ.க.வுக்கு மரண அடி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, மே 8 – 'மக்கள் தீர்ப்பு' என்று தலை வணங்கி ஏற்றுக்கொண்டு, தனது லட்சியப் பயணத்தைக் கடமை உணர்வோடு தொடர்கிறார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் என்றும் 'ரோடு ஷோ', 'காட் ஷோ' என்ற பல்வேறு வித்தைகள், வியூகங்களைச் செய்தும் – தேர்தல் முடிவுகள் பா.ஜ.க.வுக்கு மரண அடி என்று மாநாட்டு முகப்பிலிருந்து பெரியார் படத்தை அகற்றியவர்களை தமிழ்நாட்டிலிருந்து அகற்றிய வாக்காளர்கள் என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.**



*அவரது அறிக்கை வருமாறு:*

*தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகளின் காரணமாகக் கடந்த அய்ந்து ஆண்டுகளில் ஆண்ட தி.மு.க., எதிர்க்கட்சியாகி உள்ளது. அதை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'மக்கள் தீர்ப்பு' என்று அவருக்கே உரிய கண்ணியத்துடன் தலை வணங்கி ஏற்றுக்கொண்டு, தனது கொள்கை லட்சியப் பயணத்தை அரசியல் கடமை உணர்வோடு தொடர்கிறார்!*

*இந்தத் தேர்தல் முடிவுகளின் மற்றொரு முகம் - பரிதாபத்திற்குரிய பா.ஜ.க. படுதோல்வியும் மற்றும் தோல்வி முகங்களும் ஆகும்!*

*'டபுள் எஞ்சின் சர்க்கார்' என்று பிரதமர் மோடியும், அவரது பா.ஜ.க.வின் ரத, கஜ, துரக, பதாதி பட்டாளமும், தமிழ்நாட்டில் உள்ள அத்தனைத் தொகுதிகளிலும் படையெடுத்துப் பாய்ச்சல் காட்டினர்.*

*ஒன்றிய அமைச்சர்கள், பா.ஜ.க. வடபுலத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள் பறந்து வந்தனர். அட்ரஸ் இழந்த 'அரோகரா' அண்ணாமலைகள் - 'ஹெலிகாப்டர்' பிரச்சார 'பற'ந்தாமன்கள் ஆனார்கள்!*

*இவையெல்லாம், தி.மு.க.வை வேரோடு பிடுங்கி எறியப் போவதாக 'அடமான எஜமானர் அமித்ஷா', வழக்கமான தமிழ்நாட்டு பா.ஜ.க. நிலைய வித்துவான்களான தமிழிசை, ஹிந்து முன்னணியின் திருப்பூர் தலைவர், ஏவுகணைகள், அக்கிகாரத்தின் அலம்பல், அர்ச்சனை சம்பத்துகள் இவையெல்லாம் தாண்டி,*

**ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவர்கள்....**

*தமிழ்நாட்டிற்கென தனியே அனுப்பப்பட்டு, வீடுதோறும் திண்ணைப் பிரச்சாரம் (நேருக்கு நேர் திட்டப்படி) ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்ற 70 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பினால் அனுப்பப்பட்ட 'பிரச்சாரக்குகள்...'*

*இந்தப் பட்டாளம் எல்லாம் ஒன்றிய அமைச்சர் பியூஸ்கோயல் தலைமையில், மழை பொழிவது போல, அவதூறுகளைப் பொழிந்தது. 'ரோடு ஷோ', 'காட் ஷோ' என்ற பல்வேறு வித்தைகள், வியூகங்கள் எல்லாவித முறைகளையும் தேர்தல் ஆணையத்தின் தோன்றாத் துணையோடு, ஒரு மாத ஆட்சியே பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். நடத்தியது போன்று நடத்தினார்கள். எஸ்.அய்.ஆர். என்ற உதவியின் துணையோடு தமிழ்நாட்டில் எப்படியும் என்.டி.ஏ. ஆட்சி - தாமரை மலர்ந்தே தீருவது உறுதி என்று என்ற ஆசைக் குதிரையில் அதிக வேகமாகப் பயணித்தனர். அதற்கு அடிபணிந்து, அடமானம் வைத்த அ.தி.மு.க. தலைவரும், அவரது பரிவாரங்களும் மோடி பேசிய மதுரை பொதுக்கூட்டத்தில், மாநாட்டுப் பந்தலில் உச்சியில் வைக்கப்பட்ட பெரியார் படத்தை அகற்றச் சொல்லி, ஆணவ ஆணை பிறப்பித்தனர்; அதற்கு எந்த மறுப்பும் கூறாது அடிபணிந்து தூக்கி வீசி எறிந்தனர்!*

**பா.ஜ.க.வுக்கு அளித்த பரிசு!**

*இப்போது வந்துள்ள தேர்தல் முடிவுகள் பா.ஜ.க.வுக்கு மரண அடி; தமிழ்நாட்டில் மீண்டும் எழ முடியாது இடுப்பொடித்துக் கீழே அதல பாதாளத்தில் தள்ளி விட்டுள்ளது.*

*உதகையில் மட்டும் ஒரேயொருவர் அதுவும் தட்டுத் தடுமாறி வெறும் 100 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர் என்ற பரிதாபத்திற்குரிய நிலையைத் தமிழ்நாட்டு வாக்காளர்கள் பா.ஜ.க.வுக்குப் 'பரிசாக' அளித்துள்ளனர்.*

**முகத்தை எங்கே கொண்டு போய் வைப்பர்?**

*முன்பு 4 பேர்; இப்போது அது தேய்ந்து ஒருவர் மட்டுமே மிச்சம். அதுவும் அறிமுகம் இல்லாத ஒருவர் என்ற கையறு நிலை!*

*தோற்றவர்களில் மூன்று முறை தோல்வி கண்ட ஒன்றிய அமைச்சர் முருகன், தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர், நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவரும், முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தரராசன், அகில இந்திய பி.ஜே.பி. மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் மற்றும் வக்கணைப் பேச்சாளர்கள் பலரும் முந்தைய தேர்தலில் வாங்கிய வாக்குகளைவிட மிகக் குறைந்த ஓட்டுகள் பெற்றுள்ளனர்.*

**பெரியாரை அகற்ற முடியுமா?**

*மாநாட்டு முகப்பிலிருந்து பெரியார் படத்தை அகற்றியவர்களை தமிழ்நாட்டு வாக்காளர்கள் மனதில் உள்ள பெரியாரை அகற்ற முடியுமா?*

*முடியாது, முடியவே முடியாது!*

*தமிழ்நாடு கடும் பாறை; இங்கு 'தாமரை' மலரவே மலராது என்று நாம் பல முறை சொன்ன பதிலையே மீண்டும் காவி வித்தைக்காரர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்!*

*'திராவிட மண் - திராவிட மாடல் ஆட்சி'யின் விளைவாக இந்த மண் கொள்கை உரம் போட்டு பக்குவப் படுத்தப்பட்டுள்ளது. பாறையில் மோதினால், அதன் பார தூர விளைவுகளைத் தொடர்ந்து அறுவடை செய்வதைத் தவிர, வேறு எந்தப் பலனும் கிடைக்காது.*

**'கூடாநட்பின் தேடா விளைவு!'**

*உங்களோடு கூட்டுச் சேர்ந்து கட்சியை அடமானம் வைத்த அ.தி.மு.க.வின், அவரது கூட்டணியின் கதியோ, அதோ கதி.*

*தமிழ்நாட்டில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு, பல தொகுதிகளில் 'டெபாசிட்' இழந்ததுதான் 'கூடா நட்பின் தேடா விளைவு!'*

*மற்றொரு தோல்வியும் - பிளவும்தான் விடை!*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு

# இந்தியாவில் வெகுவாகக் குறைந்த வெளிநாட்டு முதலீடு!

*புதுடெல்லி, மே 8 - இந்திய உள்நாட்டுப் பங்குச்சந்தைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் (FPIs) முதலீடு பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.*

*2026 மார்ச் நிலவரப்படி, இது 16.13 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இது கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத மிகக் குறைந்த அளவாகும்.*

*2025 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 18.9 பில்லியன் டாலர் முதலீட்டை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திரும்பப் பெற்றனர். 2026 மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களில் மட்டுமே 20.5 பில்லியன் டாலர் முதலீடு இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளது.*

*2026 ஏப்ரல் வரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுமார் ரூ. 1.68 டிரில்லியன் மதிப்பிலான பங்குகளை விற்றுள்ளனர். இது முந்தைய முழு ஆண்டுகளில் நடந்த விற்பனையை விட அதிகமாகும்.*

*ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதன் காரணமாக கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. எரிசக்தி இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் இந்தியாவிற்கு, இந்த விலை உயர்வு நிதிப்பற்றாக் குறையை அதிகப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக பணவீக்கம் அதிகரித்துள்ளதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப் பட்டுள்ளது.*

*இந்தச் சூழலால் ஏற்பட்ட பொருளாதாரத் தயக்கம் காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தையிலிருந்து தங்கள் முதலீடுகளைத் தொடர்ந்து வெளியேற்றி (திரும்பப் பெற்று) வருகின்றனர்.*





நெல்லை மாவட்டம், இடையன்குடியில் தமிழறிஞர் கால்டுவெல் அவர்களின் 212 வது பிறந்த நாளினை முன்னிட்டு இடையன்குடியில் கால்டுவெல் நினைவு இல்லத்தில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவச் சிலைக்கு இராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் மி.ஜோசப்பெல்சி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கப்பட்டது. நிகழ்வில் இடையன்குடி சேகர குருவானவர் அருள்திரு.துரைசிங், உதவி குருவானவர் அருள்திரு.பிரட்டிக் ஜான்,நெல்லை மாவட்ட இந்து சமய அறநிலையதுறை அறங்காவலர் குழு உறுப்பினர் தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி சமுகை முரளி, ராதாபுரம் ஒன்றிய ஊராட்சி மன்றத் தலைவர்களின் கூட்டமைப்பு தலைவர் அனிதா பிரின்ஸ், இடையன்குடி ஊராட்சித் தலைவர் ஜேய்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.